பொறுப்பில் இல்லாததால் அந்த ஊராட்சி ஒன்றியங்கள் அரசாங்க அனுமதியின்றி அந்தப் பள்ளிகளுக்குக் கட்டடங்கள் கட்டிக்கொடுக்க முடியவில்லை. ஆனால், அரசு அனுமதி கேட்டால்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. வி. கே. இராஜாப் பிள்ளை: அரசு அனுமதியின்றி பள்ளிகளுக்குக் கட்டடம் கட்டுவதற்கு அரசு உத்தரவிடுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, கன்னியாகுமரிப் பகுதி திருவாங்கூர்-கொச்சி மாநிலத்திலிருந்து தமிழகத்தில் புதியதாக சேர்க்கப்பட்டதினால், அங்கெல்லாம் துவக்கப் பள்ளிகளை அரசாங்கமே ஏற்று நடத்திவந்த காரணத்தினால், அதே நிலைமை இப்பொழுதும் அங்கே நீடித்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோன்று குறைபாடுகள் இருக்குமானால் அவைகளைத் தக்க முறையில் ஆராய்ந்து, அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கவேண்டுமே தவிர, இப்பொழுது இருக்கிற நிலைமையில் அதற்கு வேறு பரிகாரம் காணமுடியவில்லை. தனியாகத்தான் ஆராய வேண்டும்.

உயர்நிலைப் பள்ளிகளிலுள்ள தமிழாசிரியர்கள்.

*646 வினா.—திரு. பி. எஸ். மணியன்: மாண்புமிகு கல்வி—உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

தமிழ் ஆசிரியர்களை உயர்நிலைப் பள்ளிகளில் தலைமை ஆசிரியர்களாக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: முதல்நிலை தமிழ் ஆசிரியர்கள் தலைமை ஆசிரியர்க்குரிய தகுதிகள் பெற்றிருந்தால், அவர்களும் விதிகளுக்குட்பட்டு தலைமை ஆசிரியர்களாக நியமனம் செய்யப்படுகின்றனர்.

திரு. பி.எஸ். மணியன்: தலைவர் அவர்களே, புலவர் பட்டம், வித்வான் பட்டம் பெற்றவர்களுக்கு அனுபவம் இருந்தும் தகுதி இருந்தும் கூட அவர்களுடைய சீனியாரிட்டிப்படி அவர்களை தலைமை ஆசிரியர்களாகப் பல பள்ளிகளில் நியமிப்பது இல்லை. ஆகவே, இனியாவது அத்தகைய பட்டம் பெற்றவர்கள் ஆங்கிலப் பட்டம் பெறாமல் இருந்தாலும்கூட, அதைக் கருதாது அவர்களைத் தலைமை ஆசிரியர்களாக நியமனம் செய்ய அரசு ஆணையிடுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: முதல்நிலை தமிழ் ஆசிரியர்கள் அனுபவம் பெற்று, தகுதி பெற்றிருந்தால், அவர்கள் யாரும் விடுபடுவதில்லை. இப்பொழுது வகுக்கப்பட்டிருக்கிற முறையில் இத்தகைய தகுதிகள் சில பேர்களுக்கு இல்லை என்ற காரணத்தினால் அது மறுக்கப்படுகிற சூழ்நிலை இருக்கலாம். எம்.ஏ., பி.எஸ்ஸி. பட்டப்படிப்பு படித்து, எல்.டி., பி.டி., பி.ஈ.டி. படித்

திருக்கவேண்டும். அல்லது பி.ஒ.எல்- படித்து தேர்ச்சி பெற்று, எல்.டி., பி.டி., பி.ஈ.டி. படித்திருக்கவேண்டும் என்ற நிபந்தனைகளை வைத்திருக்கிறார்கள். முதல்நிலை தமிழ் ஆசிரியர்கள் கூட தலைமை ஆசிரியர்களாக வருவதற்கு, அப்படி பொறுப்பு ஏற்றுக் கொள்வதற்கு நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக்கொள்வதற்குக் குறைந்தபட்சம் என்னென்ன தகுதியுடையவர்களாக இருக்கவேண்டும் என்று பரிசீலித்து, அப்படிப்பட்ட தகுதியுள்ளவர்களாக தங்களை அவர்கள் ஆக்கிக்கொண்டால் அவர்களையும் தலைமை ஆசிரியர்களாக மாற்றலாம் என்ற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது. முடிவு எடுத்தபிறகு அதுபற்றி நடவடிக்கை மேற்கொள்ளப் படும்.

புலவர் சி. பழனிசாமி : தமிழ் ஆசிரியர்கள் தாங்கள் ஒய்வு பெறும் நிலையிலேகூட, இன்னும் இரண்டாம் நிலை தமிழ் ஆசிரியர் களாக இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களையெல்லாம் முதல்நிலை தமிழ் ஆசிரியர்களாக ஆக்குவதற்கு அரசு ஏதேனும் ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, முதல்நிலை தமிழ் ஆசிரியர்களாக ஆக்குவதற்கு சிலபல விதி முறைகள், தகுதிகள் வைக்கப்பட்டிருக்கின்றன. அதற்கேற்ப அவர்கள் தங்களை தகுதி ஆக்கிக் கொள்ளவேண்டும். இல்லாவிட்டால் வேறு முறையில்தான் அதைப் பரிசீலிக்க வேண்டும்.

திரு. இ. எஸ். தியாகராஜன் : தமிழ் ஆசிரியர்களுக்காக ஒதுக்கப் பட்டிருக்கிற இடத்தில் செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் நியமிக்கப் படுகிறார்கள் அதைத் தடுப்பதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்கப் படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அப்படிப்பட்ட நிலை இருப்பதாகத் தெரியவில்லை. எங்கேனும் அப்படிப்பட்ட நிலை இருக்கு மானால், அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டால், தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. கோ. இளங்கோவன் : உயர் தொடக்கப் பள்ளிகளில் பணியாற் றும் இரண்டாம் நிலை தமிழ் ஆசிரியர்களை உயர் தொடக்கப் பள்ளி களில் தலைமை ஆசிரியர்களாக பணியாற்ற அரசு அனுமதி வழங்கி யுள்ளதா? இல்லையெனில். இனியாவது அப்படி அனுமதி வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : முதல்நிலை தமிழ் ஆசிரியர்களையே தலைமை ஆசிரியர்களாக ஆக்குவததற்கு சூழ்நிலை ஏற்படாத நிலையில், இரண்டாம் நிலை தமிழ் ஆசிரியர்களை தலைமை ஆசிரியர்களாக ஏற்றுவது என்பது, பிறகு கவனிக்கப்படவேண்டிய ஒன்று. முதல் நிலை தமிழ் ஆசிரியர்களுக்கு எந்த வகையில் தகுதியை நிர்ணயம் செய்து அவர்களை தலைமை ஆசிரியர்களாக ஆக்குவதற்கு என்ன வழிவகைகள் இருக்கின்றன என்பதே இப்பொழுது அரசாங்கத்தின் ஆலோசனையில் இருந்து வருகிறது.

திரு. கோவை செழியன்: இங்கிலாந்து நாட்டிலே இங்கிலீஷ் பண்டிதர் என்று தனியாக இல்லை. எல்லா ஆசிரியர்களுக்கும் ஆங்கிலம் தெரிந்திருக்கவேண்டும் என்ற நிலை இருக்கிறது. இங்கே மட்டும் தமிழுக்கு தமிழ் பண்டிதர்கள் என்று வைத்திருக்கிறார்கள். எல்லா ஆசிரியர்களுமே தமிழை நிச்சயமாக அறிந்து தமிழ் சொல்லிக் கொடுக்கக்கூடிய தகுதி பெற்றிருக்கவேண்டும் என்று அரசு உத்தர விடுமா? தமிழ் பண்டிதர் முறையை இனிமேலாவது நிறுத்தி விடுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, தமிழ் பணடிதர்களை நிறுத்துகின்ற நிலை இப்பொழுது ஏற்படவில்லை. ஆனால், உயர்நிலைப் பள்ளிகளில் தமிழ் சொல்லிக் கொடுக்கவும், கல்லூரிகளில் தமிழிலே பாடங்களை பயிற்றுவிக்கவும் முயற்சிகளை மெல்ல, மெல்ல மேற்கொண்டிருக்கக்கூடிய அத்தகைய சூழ்நிலை தான் இப்பொழுது இருக்கிறது. இங்கிலாந்தில் தாய்மொழி யிலேயே எல்லாவற்றையும் படிக்கின்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட சூழ்நிலை இங்கேயும் ஏற்படும்பொழுது, இப்பொழுது இருக்கிற நிலைமை தேவை இல்லாமல் இருக்கலாம்.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, may I know . . . .

MR. SPEAKER. The hon. Member can put his question in Tamil, since the main question deals with Tamil Pandits. (laughter).

திரு. கே.எம். சுப்பிரமணியம்: இரண்டாம் தர தமிழ் ஆசிரியர்கள் எஸ்.எஸ்.எல்.ஸி. பாஸ் ஆனால் முதல்தர தமிழ் ஆசிரியர்களாக மாற்றப்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. எஸ்.எஸ்.எல்.ஸி. பாஸ் ஆகவில்லையானால் இரண்டாம் தர தமிழ் ஆசிரியர்களாகவே இருக் கிறார்கள். எஸ்.எஸ்.எல்.ஸி. எழுதி, பாஸ் ஆகாதவர்கள் இரண்டாம் தர தமிழ் ஆசிரியர்களாக இரண்டு வருடங்கள் பணியாற்றியபின்னால் முதல்தர தமிழ் ஆசிரியர்களாக மாற்றப்படுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, ஆசிரி யர்களைப் பொறுத்த வரையில் தனியாக எஸ்.எஸ்.எல்.ஸி. எழுதி தேர்வு பெறுவதற்கு வசதி இருக்கிறது. ஆகவே அவர்கள் தாங்க ளாகவே அந்தத் தகுதியைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

Admission of students in Government Training Schools

* 647 Q.—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether it is a fact that Government Training Schools were directed to admit secondary grade students on basis of merits;